*6*

# இயேசுவின் மறுவருகை பற்றிய தவறான போதனைகள்

*இயேசுவின் மறுவருகையைப் பற்றி வேதாகமத்தின் போதனைகளுடன் பொருந்தி வராத பல்வேறு கருத்துக்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. இவைகளில், (1) பரவச நிலை, (2) இயேசுவின் தீர்க்கதரிசனத்தைத் தவறாக விளக்கப்படுத்துதல், (3) "கி.பி. 70 கோட்பாடு," மற்றும் (4) அந்திக்கிறிஸ்து, அர்மெகதோன் ஆகியவை பற்றிய கருத்துக்கள் ஆகியவை உள்ளடங்குகின்றன. நாம் இந்த போதனைகளை வேதவசனங்களின் வெளிச்சத்தில் ஆழ்ந்து சிந்திப்போம்.*

## *பரவச நிலை என்று ஒன்று இருக்குமா?*

*இயேசுவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும் விஷயங்களைப் பற்றி வேதாகம போதனையை நாம் கவனித்துள்ளோம். இயேசுவின் மறுவருகைக்கு முன்பு ஆயிரம் ஆண்டுகள் முன்னரசாட்சி இருக்கும் என்று நம்புகின்றவர்களான, ஆயிரமாண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள் பின்வரும் பல்வேறு முடிவுகளை அடைந்துள்ளனர்: (1) உயிருடன் உள்ள நீதிமான்கள் மற்றும் இயேசுவின் தரிசனத்தின்போது உயிர்ப்பிக்கப்படும் மரித்துப்போன நீதிமான்கள் ஆகியோரால் மாத்திரம் காணப்படும் படிக்கு இயேசு வானங்களில் இரகசியமாகவும் திடீரென்றும் தோன்றுவார். (2) அவர்களை அவர் "பரவச நிலைக்கு" உட்படுத்தி, அவ்விருசாராரையும் ஒன்றாகத் தம்முடன் ஏழாண்டுகள் இருக்கும்படிப் பரலோகத்திற்குக் கொண்டு செல்வார். (3) அந்த ஏழாண்டுகளின்போது, அந்திகிறிஸ்து ஆளுகை செய்து மாபெரும் உபத்திரவத்தைக் கொண்டு வருவான். (4) இந்தக் காலகட்டத்தில் யூதர்கள் மனம் மாற்றப்படுவார்கள், மற்றும் அவர்கள் இன்னும் பலரை மனம் மாற்றுவார்கள். (5) ஏழாண்டுகளின் முடிவில், அந்திகிறிஸ்து தனது சேனைகளைப் பரிசுத்தவான்களுக்கு எதிராக, அர்மெகதோனின் மகாயுத்தத்திற்கு வழிநடத்திச் செல்லுவான். (6) இயேசு பரிசுத்தவான்களோடு கூடத் திரும்பி வந்து, அந்தி கிறிஸ்துவை அழித்து நியாயந்தீர்த்து மற்றும் அக்கிரமக்காரரை தண்டித்து, எருசலேமில் தாவீதின் அரியணையில் வீற்றிருந்து ஆயிரம் ஆண்டுகளுக்குப் பூமி முழுவதையும்*

அரசாளுவார்.

பரவச நிலையின் போதனை வேதாகமத்தின் பல தெளிவான போதனைகளுக்கு நேர்மாறானதாக உள்ளது.

பரவச நிலையின் போதனையை உயர்த்திப் பிடிப்பதற்கு 1 தெசலோனிக்கேயர் 4:14-17 வசனப்பகுதி மிகவும் பிரியமாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் இயேசு "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்" என்று கூறப்படுகிறது. இருப்பினும், இயேசு இரகசியமாக வருவதற்குத் திட்டமிட்டிருந்தால், அவர் இவ்வளவு ஆரவாரத்தை அனுமதிக்க மாட்டார் என்பது உறுதி. அவரது வருகையானது திடீரென்று இருக்கும் ஆனால் இரகசியமாயிராது.

யோவான் 6:40ன் - படி, மரித்த நீதிமான்களின் உடல்கள் கடைசி நாளில் உயிர்ப்பிக்கப்பட வேண்டியவைகளாய் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியானது, ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள் கூறுகின்றபடி, பரவசநிலைக் கோட்பாட்டில் போதிக்கப்படுகிறபடி, முடிவுக்குச் சற்றே முன்னதாக நடக்கும் ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்பாக ஏழு ஆண்டுகள் காலம் அரசாளுகை இருக்குமென்றால், "கடைசி நாளில்" இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற முடியாது.

யோவான் 5:28, 29, மரித்த நீதிமான்கள் மற்றும் துன்மார்க்கர் - யாவரும் ஒரே நேரத்தில் ஒரே காலத்தில் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று கூறுகிறது. பரவச நிலைக் கோட்பாடானது, நீதிமான்களின் உயிர்த்தெழுதலை ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கு முன்னதாகவும், துன்மார்க்கரின் உயிர்த்தெழுதலை அந்த அரசாட்சிக்குப் பின்னதாகவும் வைக்கிறது. இரண்டு தனித்தனியான உயிர்த்தெழுதல்களைப் பற்றி வேதாகமம் ஒன்றும் கூறுவதில்லை.

களைகளின் உவமையில் இயேசு, துன்மார்க்கரும் நீதிமான்களும், காலத்தின் முடிவில் ஒரே வேளையில் அறுத்துச் சேர்க்கப்படுவார்கள் என்று போதித்தார். மக்கள் மத்தியில் இருந்து துன்மார்க்கர் ஒன்று சேர்க்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள். பின்பு பரிசுத்தவான்கள் இயேசுவின் ராஜ்யத்தில் பிரகாசிப்பார்கள் (மத். 13:24-30, 36-43).

வலையின் உவமையில் இயேசு, களைகளின் உவமையில் போதித்த அதே பாடத்தைப் போதித்தார். அவர், "இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவ தூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து" (மத். 13:47-50). பொல்லாதவர்களின் நடுவிலிருந்து நீதிமான்கள் பிரிக்கப்படுவார்கள் என்று போதிப்பதற்குப் பதிலாக இயேசு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்கள் பிரிக்கப் படுவார்கள் என்று போதித்தார்.

2 தெசலோனிக்கேயர் 1:6-10ல் பவுல், இயேசுவின் உவமைகளில் காணப்படுகிற அதே சத்தியத்தைப் போதித்தார்: இயேசு மீண்டும் வரும் போது துன்மார்க்கர் தண்டிக்கப்படுவார்கள். வசனம் 7ல் பவுல், "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச்

*செலுத்தும்படிக்கு" என்று கூறினார். தொடர்ந்து வசனம் 10 "அவர்கள் ... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" என்று கூறுகிறது.*

*உயிர்ப்பிக்கப்படவிருக்கும் அநேக சகோதரருக்குள்ளே இயேசு முதல்வராயிருந்தார் என்று பவுல் போதித்தார் (ரோமர் 8:29). அடுத்த உயிர்த் தெழுதல் என்பது, அவர் மறுபடியும் வரும்போது அவருடையவர்களாய் இருப்பவர்களை உள்ளடக்கும். பின்பு முடிவு வரும், அப்போது இயேசு 1 கொரிந்தியர் 15:22-27ன்-படி ராஜ்யத்தைத் தேவனிடம் ஒப்புவிப்பார். இந்த வசனப்பகுதியானது பரவச நிலையைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்பதற்குக் காலத்தை அளிப்பதில்லை. இயேசு மறுபடியும் வரும்போது, எல்லாரும் பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்கள், அதுவே முடிவாக இருக்கும்.*

*2 பேதுரு 3:3ல், இயேசு மறுபடியும் வரும்போது வானமும் பூமியும் எரிந்து சிதைந்துபோகும் என்று பேதுரு போதித்தார். இவ்வசனப்பகுதி யானது, பரவச நிலையைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டு அரசாட்சிக்கோ அல்லது பரவச நிலையைத் தொடர்ந்து வருவதாகப் போதிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடப்பதற்கு இந்த பூமி நிலவும் என்பதற்கோ காலத்தை அனு மதிப்பதில்லை.*

*பரவச நிலையின் போதனையானது, தானியேல் 2 மற்றும் 9 ஆகிய வற்றில் உள்ள அடையாளத்துவ வசனப் பகுதிகள் மற்றும் மத்தேயு 24, மாற்கு 13 மற்றும் லூக்கா 21 ஆகியவற்றில் உள்ள இயேசுவின் தீர்க்கதரிசனங் கள் ஆகியவற்றின் தவறான விளக்கப்படுத்துதலின்மீது கட்டியெழுப்பப் பட்டுள்ளது. மற்ற வேத வசனங்களுடைய தெளிவான போதனைகளை மீறுகிற எந்தக் கோட்பாடும் தவறாயிருக்கும் என்பது தெளிவு.*

## எருசலேமின் அழிவும் இயேசுவின் வருகையும்

*மத்தேயு 24, மாற்கு 13 மற்றும் லூக்கா 21ல் உள்ள இயேசுவின் தீர்க்க தரிசனங்கள், பெரும்பாலானவர்களால் நமது எதிர்காலத்தில் நடைபெற விருக்கும் இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிப்பதாக விளக்கப் படுத்தப்படுகின்றன. நாம் பிற்பாடு ஆழ்ந்து சிந்திக்கவிருக்கும் போதனை யைக் கொண்டுள்ள ஒரு சிலர், அந்தத் தீர்க்கதரிசனங்களில் ஏறக்குறைய எல்லாமுமே, கி.பி. 70ல் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பதாகக் கூறுகின்றனர். இவ்விரு விளக்கங்களில் எதுவுமே சரியானதல்ல, ஏனெனில் சுவிசேஷங்களில் இயேசுவின் தீர்க்கதரிசனங்கள் இவ்விரு நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கின. மத்தேயு 24:3ல் இயேசு, எருசலேமின் அழிவு பற்றியும், தமது வருகைக்கான அடையாளம் பற்றியும், காலத்தின் முடிவு பற்றியும் தமது சீஷர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தார். லூக்கா சுவிசேஷத்தில், எருசலேமின் அழிவுக்கு வழிநடத்தும் மற்றும் அந்த அழிவை உள்ளடக்கிய வைகளான இயேசுவின் முன்னுரைத்தல்களை மாத்திரம் பதிவு செய்திருக்க, மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷங்கள் இயேசுவின் இரண்டாம் வருகையையும் உள்ளடக்கின.*

*மத்தேயு 24ல் இயேசு தமது உரையின் தொடக்கத்தில், எருசலேமின்*

அழிவை நோக்கி வழிநடத்தும் நிகழ்ச்சிகளை விவரித்தார் (வ. 4-14). எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை மக்கள் காணும் போது, அழிவு சமீபமாயிருக்கிறது என்பதற்கு அது அடையாளம் என்று அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். அழிவுடன் இணைந்த உபத்திரவத்திற்குத் தப்பிக்கொள்ளும்படிக்கு அவர்கள் நகரத்தில் இருந்து தப்பி ஓட வேண்டும் (வ. 15-22; லூக். 21:20-24). பின்பு இயேசு, தம்மைப் பின்பற்றியவர்களுக்கு எருசலேம் மற்றும் இஸ்ரவேல் நாட்டின் அழிவின் போது நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றிய உவமைகளைக் கொடுத்தார் (வ. 23-34). இதைத் தொடர்ந்து அவர் தமது இரண்டாம் வருகை பற்றிக் கலந்துரையாடினார் (வ. 36-51).

வசனம் 34, பல காரணங்களினால் அவரது உரையில் ஒரு இடைமுறிவைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்க வேண்டும்:

வசனம் 34க்கு முன் முதல் பகுதியில் இயேசு விவரித்திருந்த யாவும் அவர் பேசிக் கொண்டிருந்த "இந்தத் தலைமுறையின்" வாழ்வுக் காலத்தில் நடைபெறும். இயேசு தமது ஊழியத்தின்போது, தாம் பேசிக் கொண்டிருந்த காலத்தில் வாழ்ந்தவர்களைக் குறிப்பிடுவதற்கு "இந்தத் தலைமுறை" என்ற சொல்விளக்கத்தைச் சீராகப் பயன்படுத்தினார்.[1] இதற்கு ஒரு விதிவிலக்கு என்பது அந்நியமானதாகக் காணப்படும்.

முதல் பகுதியில் அவர், "அந்த நாட்கள்" என்பது பற்றிப் பேசினார் (வ. 19, 22, 29); ஆனால் வசனம் 34க்குப் பின்பு, இரண்டாவது பகுதியில் அவர் "அந்த நாள்" என்பது பற்றிப் பேசினார் (வ. 36). இயேசு, கடைசி நியாயத்தீர்ப்புக்கான தமது வருகை பற்றிக் குறிப்பிடுவதற்கு "அந்த நாள்" அல்லது "நாள்" என்ற சொல்விளக்கத்தைச் சீராகப் பயன்படுத்தினார்.[2]

முதல் பகுதியில் இயேசு, எருசலேமின் அழிவுக்கு முன்பாக நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றியும் (வ. 5-14) அழிவு சமீபமாயிருப்பதைச் சுட்டிக் காண்பிக்கும் அடையாளம் பற்றியும் (வ. 15; லூக். 21:20-24உடன் ஒப்பிடவும்) பேசினார். இரண்டாவது பகுதியில் "அந்த நாள்" என்பது - அவர் மீண்டும் வருதலின்போது (வ. 36) - அடையாளம் அல்லது எச்சரிக்கையை முன்கொண்டிராது, ஆனால் ஜலப்பிரளயம் வந்த வேளையில் இருந்தது போலவே மற்றும் திருடன் வருகிற விதமாகவே இருக்கும் (வ. 36-43).

முதல் பகுதியில் இயேசு, அடையாளத்தை அறிந்து புரிந்து கொண்டவர்கள் தப்பியோட வேண்டும் என்று குறிப்பிட்டார் (வ. 16). இந்த அடையாளம் மற்றும் எச்சரிக்கையின் காரணமாக, கிறிஸ்தவர்கள் பாதுகாப்பிற்காக, எருசலேம் மற்றும் யூதேயாவில் இருந்து, யோர்தான் நதியைக் கடந்து பெல்லா என்ற இடத்திற்கு ஓடிச் சென்றனர்.[3] இரண்டாவது பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடைபெறும் வரையிலும் என்ன நடக்கிறது என்று ஒருவரும் புரிந்துகொள்ள இயலாதபடிக்கு எதிர்பாராத வகையில் நடைபெறும் (வ. 39). எவரொருவரும் தப்பியோட இயலாது, ஏனெனில் எந்த அடையாளமும் தரப்படாது. ஆகையால், நாம் எல்லா வேளைகளிலும் ஆயத்தமாய் இருக்கவேண்டும் (வ. 37-51).

எருசலேமின் அழிவுக்கு முன் நடக்கும் என்று இயேசு விவரித்திருந்த நிகழ்ச்சிகளை அவரது மறுவருகையைக் குறிப்பதற்குப் பயன்படுத்த முயற்சி

*செய்பவர்கள் இயேசுவின் போதனையைத் தவறாகப் பயன்படுத்து கின்றனர் (வ. 4-34). இவைகள் அவரது இரண்டாம் வருகைக்கு அடையாளங்களாகப் பயன்படுத்தப்பட இயலாது; மாறாக, இவைகள் எருசலேம் மற்றும் இஸ்ரவேலின் வீழ்ச்சிக்கு முன் நடக்கவிருந்த நிகழ்ச்சிகளின் விவரிப்பாக இருந்தன.*

*மத்தேயு 24:29-31ன் காரணமாகச் சிலர் இந்த விளக்கத்தை மறுக்கின்றனர். அவர்கள், இந்த வசனங்களின் கூற்றுக்கள் நேர்ப்பொருளில் எடுத்துக்கொள்ளப்படக் கூடாது, ஆனால் அடையாளத்துவமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதை உய்த்துணரத் தவறுகின்றனர்; ஏனெனில் இவைகள், தேசங்களின் அழிவு பற்றி விவரிப்பதற்குப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் பயன்படுத்திய உருவக மொழிநடைகளால் மூடப்பட்டுள்ளன.[4] மத்தேயு 24:30ல் எருசலேமின் அழிவின்போது இயேசுவின் "வருகை" கூட அவரது இரண்டாம் வருகை என்றல்ல ஆனால் இஸ்ரவேல் நாட்டிற்குத் தண்டனையும் அவரது வருகை என்பதாகவே நினைக்கப்பட வேண்டும். "இவைகளை" அவர்கள் காணும்போது (மத். 24:33), அவர் எருசலேமை அழிப்பதற்குத் தயாராக, சமீபமாய் இருந்தார் என்பதை உய்த்துணருவார்கள். அவர்கள் மலைகளுக்குத் தப்பியோட வேண்டும் என்று அறிவார்கள், ஆதிக் கிறிஸ்தவர்கள் செய்தது போலவே. இந்தத் தீர்க்கதரிசனத்தின் காரணமாக, அவர்கள் இந்த அடையாளங்களைக் காணும்போது, அவர் எருசலேமின்மீது பழிதீர்க்கத் தயாராக இருந்தார் என்பதை அவர்கள் உய்த்துணர்ந்தனர். இருப்பினும், அவரது இரண்டாம் வருகை நிகழும் "அந்த நாளில்," அடையாளமோ, எச்சரிக்கையோ அல்லது தப்பி ஓடுவதற்கான வாய்ப்போ இராது.*

## *கி.பி. 70 கோட்பாடு*

*சிலர், மத்தேயு 24ன் எல்லாப் பகுதிகளையும், மற்ற வசனப்பகுதிகளை யும் கி.பி. 70ல் நடைபெற்ற எருசலேமின் அழிவுக்கு மாத்திரமே நடைமுறைப் படுத்துவார்கள். அவர்கள், இயேசு அந்த வேளையில் திரும்பி வந்து, மரித்தோரை உயிர்ப்பித்து அவர்களை நியாயந்தீர்த்தார் என்று நம்புகின்றனர். அதுமுதல், எல்லாரும் மரணத்தின்போது நியாயந்தீர்க்கப் பட்டு உடனடியாகப் பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அனுப்பப் படுகின்றனர் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.*

*இந்தக் கோட்பாடு தவறானது என்பதை, மேலே கொடுக்கப்பட்ட தகவல் சுட்டிக்காண்பிக்கிறது. மேலும், "கடைசி நாள்" என்பதும் அதைச் சுற்றி நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளும் இந்தத் தவறான கண்ணோட்டத் துடன் ஒப்புரவாக்கப்பட இயலாது.*

*இயேசுவில் விசுவாசம் கொள்கின்ற யாவரும் "கடைசி நாளில்" உயிர்ப் பிக்கப்படுவார்கள் என்று அவர் உரைத்தார் (யோவா. 6:39, 40). இயேசு பேசிய வார்த்தையே "கடைசி நாளில்" நியாயத்தீர்ப்புக்கு அடிப்படையாக அமையும் (யோவா. 12:48). எருசலேமின் அழிவு என்பது "கடைசி நாளாக" இருக்க முடியாது, ஏனென்றால், அதன் அழிவைத் தொடர்ந்து பல நாட்கள்*

வந்து விட்டன. இயேசு குறிப்பிட்ட "கடைசி நாள்" என்பது பூமியின் வரலாற்றில் கடைசி நாளாக, அது அழிக்கப்படும் நாளாக இருக்க வேண்டும். பூமி தனது அச்சில் சுழலாமல், நாட்கள் என்பது இருக்க முடியாது. அந்த "கடைசி நாள்" என்பது மரித்தோர் உயிர்த்தெழுப்பப்பட்டு நியாயந் தீர்க்கப்படுகிற நாளாக, பூமி அழிக்கப்படும் நாளாக இருக்கும். கி.பி. 70ல் அந்த நாள் வரவில்லை. இயேசுவின் வருகைக்கு முன்பு நடைபெறும் "கடைசி நாட்களின்" நிகழ்ச்சிகள் (2 பேது. 3:3) மற்றும் வானங்கள், பூமி ஆகியவற்றின் அழிவு ஆகியவை "கடைசி நாளுக்கு" வழிநடத்திச் செல்லும்.

## அந்திக்கிறிஸ்துவும் அர்மகெதோனும்

மதக்குழுவினர் சிலர் அந்திக்கிறிஸ்து மீதும் அர்மகெதோன் யுத்தத்தின் மீதும் அதிகமான வலியுறுத்தத்தை வைப்பதால், பிரபலமான இவ்விரு தலைப்புகளைப் பற்றியும் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

யோவான், "அந்திக்கிறிஸ்து"வைப் பற்றி எழுதினார், ஆனால் அப்படி பட்டவர்கள் "அநேகர்" வருவார்கள் என்று அவர் உரைத்தார் (1 யோவா. 2:18; 2 யோவா. 7), அவர்கள் இயேசுவைத் தேவனிடத்தில் இருந்து வந்த கிறிஸ்து (1 யோவா. 2:22; 4:3) என்றும் அவர் மாம்சத்தில் வந்த தேவன் என்றும் (2 யோவா. 7) ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிப்பார்கள். இவர்கள் இயேசுவுக்கு எதிராகப் போராடுகின்ற உலக சேனையின் இராணுவத் தலைவர்களாகவோ அல்லது 2 தெசலோனிக்கேயர் 2:3ன் "பாவ மனுஷனாகவோ" இருப்பதில்லை. இதற்குப் பதிலாக, இவர்கள் யாவரும் மதரீதியான வஞ்சிப்பவர்கள் என்று விவரிக்கப்படுகின்றனர் (2 தெச. 2:10; 2 யோவா. 7).

அர்மகெதோன் (வெளி. 16:14-16) என்பது அநேகமாக, தீர்மானமான பல யுத்தங்கள் நடைபெற்ற மெகிதோ மலை என்ற இடமாக இருக்கலாம், இயேசு தமது ஆயிரம் ஆண்டு அரசாட்சியைத் தொடங்குவதற்கு முன்பு, அவருக்கு எதிராக யுத்தம் செய்யும்படி அந்திக்கிறிஸ்து, துன்மார்க்கர் யாவரையும் ஒன்றுகூட்டுவான் என்று இந்தக் கருத்தைப் பற்றிக் கொண்டிருப்பவர்களால் கூறப்படுகிறது. அந்திக்கிறிஸ்து அல்ல ஆனால் அசுத்த ஆவிகளே யுத்தத்திற்காகச் சேனைகளை ஒன்றுகூட்டும் என்று வெளி. 16:14-16ல் கூறப்படுகிறது. இங்கு கலந்துரையாடலில் உள்ள யுத்தம் என்பது சத்தியத்திற்கும் பொல்லாங்கிற்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தின் உருவகமாக உள்ளதே தவிர, இது உலகப்பிரகாரமான யுத்தமாக இருப்பதில்லை.

அந்திக்கிறிஸ்துகள் என்பவர்கள் மதரீதியாக வஞ்சிப்பவர்களாய் இருக்கின்றனர்; இவர்கள் (ஒன்றாக சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ) அர்மகெதோனுடன் இணைவு கொண்டிருந்தால், இவர்கள் சத்தியத்திற்கு எதிராக ஆவிக்குரிய யுத்தம் செய்பவர்களாக - ஒரு வேளையில் அல்ல, ஆனால் காலந்தோறும் நடைபெறும் யுத்தம் செய்பவர்களாக - காணப்பட வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு யுத்தங்களுக்கு இடையில் வேதாகமம் எந்த இணைவையும் ஏற்படுத்தாதபடியினால், இவற்றை

இணைத்தல் என்பது யூகமாகவே இருக்க வேண்டும்.

## முடிவுரை

வேத வசனங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி நாம் பெற்றுள்ள ஒரே தகவலை மாத்திரம் தருகின்றன. அவரது மறுவருகை பற்றிய நமது புரிந்துகொள்ளுதலில், நாம் மனிதர்களின் யூகங்களினால் அல்ல ஆனால் வேத வசனங்களினால் மாத்திரம் வழிநடத்தப்பட வேண்டும்.

---

குறிப்புகள்

[1]*மத். 11:16; 12:41, 42, 45; 23:36; மாற். 8:12; லூக். 11:29-32, 50, 51; 17:25 ஆகிய வசனங்களைக் காணவும். (விசேஷமாக மத். 23:36ஐக் காணவும்.)* [2]*மத். 7:22; 1 கொரி. 1:8; 5:5; 2 கொரி. 1:14; பிலி. 1:6, 10; 2:16; 1 தெச. 5:2; 2 தெச. 2:2; 2 தீமோ. 1:18; 4:8; 2 பேது. 3:10 ஆகிய வசனங்களைக் காணவும்.* [3]Eusebius, *Church History,* III.5. [4]*ஏசா. 13:9, 10; 34:5-10; எசே. 32:7, 8; யோவே. 2:10 ஆகிய வசனங்களைக் காணவும்.*